DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 4 | LW : 3 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜேஸ்வரி | Caste | |
| Spouse Name | தங்கராஜ் | Calling | இல்லத்தரசி |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 55 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 30.05.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது புளியம்பட்டியில் வசித்துக்கொண்டு இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன தங்கராஜ் எனது கணவர். வழக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவிக்கும்போது நான் எனது வீட்டிலிருந்தேன். 04.09.2017-ம் தேதியன்று இரவு 7.15 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது. எனது கணவர் TVS Centra இரு சக்கர வாகனத்தில் எனது கொழுந்தியாவின் மகளை Special class முடிந்து பள்ளியிலிருந்து அழைத்து வருவதற்காக சென்றார். பள்ளிக்கு எதிர் திசையில் குழந்தையை அழைத்துச் செல்வதற்காக காத்துக்கொண்டிருந்தபோது சத்தி - கோவையை நோக்கி வரும் ஒரு காரானது நின்றுகொண்டிருந்த எனது கணவரின் மீது மோதியதாக முரளிகிருஷ்ணன் எனக்குத் தகவல் கூறினார். முரளிகிருஷ்ணனும் அவரது குழந்தையை அழைத்துச் செல்வதற்காக பள்ளிக்கு சென்றிருந்தார்.

2. தகவல் கிடைத்தபின் விபத்து ஏற்பட்ட இடத்திற்கு 10 நிமிடத்திற்குள் நான் சென்றேன். அங்கு எனது கணவரை அழைத்துச் செல்வதற்காக 108 ஆம்புலன்ஸ் நின்றிருந்தது. பின்பு அவரை 108 ஆம்புலன்ஸில் கோவை சத்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே எனது கணவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். காரின் விபரம் ஓட்டிவந்தவரின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் நான் அங்கு செல்லும்போது கார் அங்கு இல்லை. தர்மலிங்கம் என்பவர் காரில் வந்து மோதியதாக அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சாட்சி சீனிவாசன் என்பவர் என்னுடைய உறவினரா என்றால் இல்லை தெரிந்த நபர்.

முரளிகிருஷ்ணன், ரமேஷ் ஆகியோர் எனது உறவினர்களா என்றால் உறவினர்கள் இல்லை ஒரே ஊர்க்காரர்கள் தெரிந்த நபர்கள்தான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே அங்கு போலீசார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் செல்வதற்கு முன்பாகவே அங்கு கூட்டம் இருந்ததா என்றால் ஆமாம்.

2. அப்போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். அந்தக் கூட்டத்தில் யார் யார் இருந்தார்கள் என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரிதான். எனது கணவர் பள்ளிக்கு சென்று அதன் எதிர்திசையில் குழந்தைக்காக காத்துக்கொண்டிருந்து குழந்தை வராததால் மேற்படி ரோட்டைக் கடந்து பள்ளிக்குச் சென்றரா என்றால் இல்லை பள்ளியின் எதிர்புறத்தில் குழந்தைக்காக காத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். பள்ளியின் அருகே பேரிகார்டு இருந்ததா என்றால் நான் பார்க்கும்போது அங்கு இல்லை. இரவு 07.15 மணிக்கு Special class முடிந்து குறைந்தது 300 குழந்தைகளாவது பள்ளியிலிருந்து வருவார்களா என்றால் ஆமாம். அப்போது பேரிகார்டு வைக்கப்படுமா என்றால் ஒருமுறை வைக்கப்பட்டிருக்கும் ஒருமுறை இருக்காது விபத்திற்குப் பின்புதான் அங்கு நிரந்தரமாக பேரிகார்டு வைக்கப்பட்டுள்ளது.

3. நாங்கள் அந்தப் பகுதியில் எவ்வளவு வருடமாக இருந்து வருகிறோமா என்றால் 20 வருடங்களுக்கு மேல். அந்தப் பள்ளியில் 2000 மாணவர்களுக்கு மேல் படிப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி சாலையானது என்.எச் ரோடு என்றால் சரிதான். மேற்படி பகுதியில் பள்ளி இருந்து வருவதால் அங்கு இருபுறங்களிலும் பேரிகார்டும் நிரந்தரமாகவே இருந்து வருகிறது என்றால் வேகத்தடை உள்ளது பேரிகார்டு வைத்திருந்தார்கள். எனது கணவரின் மீது மோதிய வண்டி நிற்காமல் சென்றுவிட்டதா என்றால் அப்படித்தான் எனக்குத் தகவல் கொடுத்தார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது கார் அங்கு இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
| PW : 5 | LW : 9 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | சீனிவாசன் | Caste | |
| Father Name | ரங்கப்பகவுடர் | Calling | விவசாயம் |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 56 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 30.05.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது புளியம்பட்டியில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தேதி ஞாபகம் இல்லை 2017 ம் ஆண்டு இரவு 07.15 மணிக்கு புளியம்பட்டியிலுள்ள SRC பள்ளியில் 12 படித்துக்கொண்டிருந்த எனது மகளை கூப்பிடுவதற்காக சென்றிருந்தேன். அப்போது நானும், முரளிகிருஷ்ணா, ரமேஷ் ஆகியோர் ஸ்கூல் கேட்டிற்கு அருகில் ரோட்டின் ஓரத்தில் நின்றுபேசிக்கொண்டிருந்தோம். சத்தியிலிருந்து கோவை செல்வதற்காக கார் ஒன்று வந்தது. தங்கராஜ் என்பவர் ரோட்டின் வலதுபுறமாக அதாவது பள்ளிக்கு எதிர்புறமாக பைக்கில் நின்றுகொண்டிருந்தார். வேகமாக வந்த கார் தங்கராஜ் மீது மோதியதில் தங்கராஜ் மேலே தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தார்.

2. நானும், முரளிகிருஷ்ணணும் ஆம்புலன்ஸிக்குப் போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வந்தது. தங்கராஜின் மனைவிக்கு முரளிகிருஷ்ணன் என்பவர் தகவல் சொல்லி அவர் சம்பவ இடத்திற்கு வந்தார். ஆம்புலன்ஸில் தங்கராஜை அவரது மனைவி சிகிச்சைக்காக புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து சத்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். காரை ஓட்டிவந்த நபர் காரை நிறுத்தாமல் சென்றுவிட்டார். அது சிப்ட் கார் எண்.6363 ஆகும். பின் அவர் காலையில் அரசு மருத்துமனையில் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. கார் நிற்காமல் சென்றுவிட்டதால் அதை ஓட்டி சென்ற நபரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்ததாகச் சொல்லக்கூடிய நேரம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காக அங்கு நிறைய பெற்றோர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். டமாரென்று சத்தம் கேட்டுதான் விபத்து

நடந்த இடத்திற்குச் சென்று பார்த்தேனா என்றால் இல்லை நான் நின்றிருந்த இடத்திற்கு முன்னால்தான் விபத்து நடந்தது நான் பார்த்தேன். நான் பள்ளி செக்யூரிட்டிக்கு அருகில் நின்றுகொண்டிருந்தேனா என்றால் பள்ளியின் கேட்டிற்கு முன்பு நின்றுகொண்டிருந்தேன். பள்ளியின் செக்யூரிட்டி அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். அப்போதே போலீசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் வந்துவிட்டார்கள்.

2. கார் நிற்காமல் சென்றது என்றால் ஆமாம். தங்கராஜீன் மனைவி அங்கு வந்த பின்பு போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் அந்த இடத்தில் விசாரிக்கவில்லை புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள் அங்கு வைத்து போலீசார் விசாரித்தார்கள். புளியம்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். அப்போதே என்னுடன் இருந்த ரமேஷ், முரளிகிருஷ்ணன் ஆகியோரையும் போலீசார் விசாரித்துவிட்டனரா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த அன்று என்னை விசாரித்த நேரம் இரவு 08.00 மணி இருக்குமா என்றால் இரவு 08.00 இருக்கலாம்.

3. அதன் பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் புளியம்பட்டி போலீசார் விசாரிக்கவில்லை ஆனால் எஸ்.பி ஆபிஸில் விசாரித்தார்கள். நான் சொன்ன நாள், நேரத்தில் நானும் முரளிகிருஷ்ணனும், ரமேஷ்ம் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், இறந்துபோன தங்கராஜ் எனக்கு வேண்டிய நபர் என்பதாலும் அவரது குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக விபத்தை நேரில் பார்த்ததாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரவு நேரம் என்பதால் விபத்தை நான் நேரில் பார்ப்பதற்காக சரியல்ல பள்ளியின் முன்பு லைட் எரிந்துகொண்டிருந்தது.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 6 | LW : 10 | C.MP. | DVC : |

| Name | முரளிகிருஷ்ணன் | Caste | |
|---|---|---|---|
| Father Name | அய்யாசாமி | Calling | விவசாயம், கவுன்சிலர் |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 54 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 30.05.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது புளியம்பட்டியில் வசித்துக்கொண்டு விவசாயம் மற்றும் புளியம்பட்டி 10 வது வார்டில் கவுன்சிலராக உள்ளேன். 04.09.2017-ம் தேதியன்று எனது தோட்டத்தில் களையெடுத்தவர்களுக்கு சம்பளம் கொடுத்துவிட்டு மாலை 07.15 மணிக்கு புளியம்பட்டி S.R.C பள்ளி அருகே வரும்போது என் நண்பர்கள்கள் சீனிவாசன், ரமேஷ் ஆகியோர்களின் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காக பள்ளிக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். தங்கராஜ் அவரது அக்காவின் குழந்தையையோ அல்லது தங்கையின் குழந்தையையோ பள்ளியிலிருந்து அழைத்துச் செல்வதற்காக புளியம்பட்டி - சத்தி போர தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உள்ள ரோட்டின் இடதுபுறத்தில் பள்ளிக்கு முன்பாக TVS 50 வாகனத்தில் நின்றுகொண்டிருந்தார்.

2. சத்தி - புளியம்பட்டி நோக்கி வந்த சிப்ட் கார் ஒன்று தங்கராஜின் மீது மோதி அதில் தங்கராஜ் மேலே தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தார் அதற்குப் பின்னால் இருந்த ஒரு TVS 50 வண்டியிலும் மோதியது. அந்த TVS 50 யில் ஒரு கணவன், மனைவி இருந்தார்கள். மேற்படி இரண்டு வண்டிகளிலும் மோதிவிட்டு கார் நிற்காமல் சென்றுவிட்டது. நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து 40 அடி தூரத்தில் விபத்து நடந்தது. தங்கராஜ் வேலை செய்து வந்த அவரது ஓனர் நடராஜீக்கும், தங்கராஜீன் மனைவிக்கும் தகவல் சொன்னேன். பிறகு ஆம்புலன்ஸிக்கு தகவல் சொல்லி பிறகு ஆம்புலன்ஸிக்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்தது. தங்கராஜை சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இன்னொரு வண்டியில் அடிபட்ட கணவன், மனைவியை புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பிறகு தங்கராஜ் இறந்துவிட்டதாக தகவல்

சொன்னார்கள். காரின் நெம்பரை 6363 என்று போலீஸ் ஸ்டேசன் போன் பின்பு கேள்விப்பட்டேன். கார் நிற்காமல் சென்விட்டதால் அதனை ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இறந்துபோன தங்கராஜிம் நானும் நண்பர்கள் என்றால் இல்லை வெறும் பழக்க வழக்கம்தான். எனது குழந்தை SRC பள்ளியில் படிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரிக்கும்போது ரமேஷ், சீனிவாசன் ஆகியோரையும் போலீசார் விசாரித்தார்களா என்றால் என்னை விசாரித்தார்கள். ரமேஷ், சீனிவாசன் அங்கு இருந்தார்கள். அவர்கள் இருவரையும் விசாரித்தார்களா என்று எனக்குத் தெரியாது. ரமேஷ், சீனிவாசன் ஆகியோரை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

2. எனது வீடு எங்கு உள்ளது என்றால் புளியம்பட்டி பஸ் நிலையத்திற்கு பின்புறம் உள்ளது எனது தோட்டம் எங்குள்ளது என்றால் பனையம்பள்ளியில் உள்ளது. நான் எனது தோட்டத்திற்கு செல்வதற்காக புளியம்பட்டி - பவானி செல்லும் ரோட்டில் பயணம் செய்வேன் என்றால் இல்லை நல்லூர் சுங்காரன்பாளையம் வழியாகத்தான் செல்வேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான் இரவு 07.15. நாங்கள் பேசிக்கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடம் என்னவென்றால் SRC பள்ளி கேட்டின் முன்பு. மேற்படி கேட்டின் முன்பு வழக்கமாக குழந்தைகளை அழைத்துச் செல்லப் நிறைய பெற்றோர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். சுமார் எத்தனை பெற்றோர்கள் வருவார்கள் என்றால் சுமார் 15.

3. பள்ளி கேட்டிற்கும், தார் ரோட்டிற்கும் இடையேயுள்ள தூரம் 20 அடி. சத்தம் கேட்டுதான் ஓடிச்சென்று பார்த்தேனா என்றால் சத்தம் கேட்டதும் நானும், விபத்தைப் பார்த்துக்கொண்டேதான் இருந்தேன். விபத்து ஏற்பட்டவுடன் கூட்டமாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி கூட்டத்தில் யார் முதலில் சென்று அடிபட்டவர்களைப் பார்த்தார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது நாங்கள் எல்லோரும்தான் அங்கு இருந்தோம். யார் முதலில் சென்று பார்த்தார்கள் என்றால் வேறு ஒரு நண்பர்தான் அடிபட்டவரைப் புரட்டிப்போட்டிருந்தார். தங்கராஜ் மனைவி வருவதற்கு முன்பாகவே போலீசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் அங்கு விபத்து ஏற்பட்டிருந்த அலப்பறையில் அதை நான் கவனிக்கவில்லை.

4. மேற்படி அடிபட்ட நபர்களை மருத்துவமனைக்கு விபத்து நடந்த இடத்திலிருந்து எடுத்துச் செல்வதற்கு முன்பாகவே போலீசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் ஆமாம்.

பள்ளியின் முன்பு இரு புறங்களிலும் பேரிகார்டு வைக்கப்பட்டுள்ளது என்றால் பேரிகார்டு இல்லை. பள்ளி முடிந்து குழந்தைகள் வெளியே வரும்போது பேரிகார்டு வைக்கப்படுமா என்றால் வைக்கப்படும். விபத்து நடந்ததாகச் சொல்லப்படும் நேரம் Special class முடிந்து மாணவர்கள் வெளியே வரும் நேரம் என்றால் சரிதான். பள்ளியின் இருபுறத்திலும் வேகத்தடை உள்ளது என்றால் இல்லை. பள்ளியில் 1000, 2000 மாணவர்கள் படிப்பார்களா என்றால் படிப்பார்கள்.

5. பள்ளியின் முன்பு பேரிகார்டு இருந்தது என்றாலும் நான் தற்போது பேரிகார்டு இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் அங்கு பேரிகார்டு இருந்ததைப் பார்த்திருப்பேன் என்றாலும் நான் சம்பவ இடத்திற்கே செல்லாததால்தான் பேரிகார்டு இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது நண்பர் ரமேஷ், சீனிவாசன் ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், தங்கராஜீன் குடும்பத்தார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விபத்தை நேரில் பார்த்ததாக நானும், ரமேஷும், சீனிவாசன் ஆகியோரும் பொய்யாக சாட்சியமளிக்கிறோம் என்றால் சரியல்ல. விபத்தில் காயம்பட்ட தங்கராஜை நேரடியாக சத்தி அரசு மருத்துவமனைக்குத்தான் கொண்டு சென்றார்களா என்றால் ஆமாம். வேறு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
| PW : 7 | LW : 11 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Caste | |
| Father Name | நாகப்பன் | Calling | தனியார் பஸ் டிரைவர் |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 55 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 30.05.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது புளியம்பட்டியில் வசித்துக்கொண்டு தனியார் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 04.09.2017-ம் தேதியன்று மாலை 07.15 மணி சுமாருக்கு SRC பள்ளியில் 11 ம் வகுப்பு படிக்கும் எனது மகளை பள்ளியிலிருந்து பள்ளியின் கேட்டிற்கு முன்பு அழைத்து வந்துகொண்டிருந்தேன். அப்போது டமாரென்று கேட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தேன். தங்கராஜ் கீழே கிடந்தார். தங்கராஜ் TVS XL 6519 வண்டியில் அவரது தங்கை மகளை அழைத்துச் செல்வதற்கு வந்திருந்தார். சத்தியிலிருந்து புளியம்பட்டி நோக்கி வந்த சிப்ட் கார் தங்கராஜை அடித்துவிட்டு நிற்காமல் சென்றது. அங்கு நானும், முரளிகிருஷ்ணணும், சீனிவாசன் அங்கு இருந்தோம். நானும், சீனிவாசனும் என்னுடைய குழந்தைகளைப் பள்ளியிலிருந்து அழைத்து வந்தோம். முரளிகிருஷ்ணன் அவரது தோட்டத்திலிருந்து வந்தார். வேறு யாருக்கும் ஒன்றும் ஆகவில்லை.

2. ஆம்புலன்ஸ் வந்து தங்கராஜை சத்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து தங்கராஜ் இறந்துவிட்டதாக போன் மூலம் தகவல் வந்தது. விபத்து ஏற்படுத்திய கார் நிற்காமல் சென்றதால் அதை யார் ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. சிப்ட் காரின் எண் 6363. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தங்கராஜ் எனக்குப் பழக்கமானவர் என்றால் நல்ல நெருங்கிய நண்பர்தான். முரளிகிருஷ்ணன், சீனிவாசன் ஆகியோருக்கும் தங்கராஜ் நெருங்கிய நண்பர் என்றால் ஆமாம். நானும், சீனிவாசனும் பள்ளியிலிருந்து குழந்தைகளை அழைத்து வரும்போதுதான் சத்தம் கேட்டதா என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு

செல்வதற்குள் கூட்டமாகிவிட்டதா என்றால் சத்தம் கேட்டு எல்லோரும் அங்கு கூடிவிட்டார்கள். யார் முதலில் சென்று பார்த்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். முரளிகிருஷ்ணன் தோட்டத்திலிருந்து பைக்கில் வந்தார் என்றால் சரிதான். நான் குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வரும்போது முரளிகிருஷ்ணன் பைக்கில் வந்தார். சத்தம் கேட்டு முரளிகிருஷ்ணன் அங்கு வந்தாரா என்றால் ஆமாம்.

2. விபத்து ஏற்பட்டு 4, 5 நிமிடத்தில் முரளிகிருஷ்ணன் அங்கு வந்தாரா என்றால் 4 நிமிடத்தில் வந்தார். போலீசார் உடனடியாக வந்துவிட்டார்களா என்றால் ஆமாம். போலீசார் சம்பவ இடத்திலேயே என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இந்த விபத்து குறித்து இதுவரை என்னை விசாரிக்கவில்லை என்றால் விபத்து ஏற்பட்டு 20 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அதற்கு முன்பு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது தற்போது நீதிமன்றத்தில் கூறியதுபோல்தான் சொன்னேனா என்றால் ஆமாம்.

3. விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான் இரவு 07.15. இரவு என்பதால் வண்டியின் எண்ணை என்னால் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல வண்டியின் பின்னால் இருந்த எண்ணை நான் பார்த்தேன். காரானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் என்னால் காரின் பின்பகுதியைப் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல கேட்டை விட்டு நான் வெளியே வந்துவிட்டதால் காரின் பின்பகுதியைப் பார்த்தேன். சத்தம் கேட்டு 3 நிமிடத்தில் விபத்து நடந்த இடத்திற்கு சென்றுவிட்டேனா என்றால் அரை நிமிடத்திலேயே சென்றுவிட்டேன். பள்ளியின் கேட்டிற்கும், விபத்து நடந்ததாகச் சொல்லப்படும் இடத்திற்கும் இடையேயுள்ள தூரம் என்றால் 50, 60 அடியிருக்கும். அவ்வாறான நிலையில் இரவு நேரம் என்பதால் என்னால் வாகனத்தின் எண்ணைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.